**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No. 66/2025 - PW-8**

| | |
|---|---|
| Name | திரு.சத்தியராஜ் |
| Husband/Father Name | ஆறுமுகம் |
| Village /Area | நெல்வாய் |
| Taluk | நெமிலி |
| Occupation | தறி நெய்தல் |
| Age | 35 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 20.01.2026.

**(எதிரிகள் 2, 5 ஆஜர். எதிரிகள் 3, 4 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 18.01.2025 ம் தேதி என்னை எனது மாமா பழனி கல்பாக்கத்துக்கு போகும் வழியில் போலீசார் விக்கி (குற்றவாளி) என்பவரை எங்கள் கிராமத்தில் குயில் என்று அழைக்கப்படுபவரை கொளுத்தியது சம்மந்தமாக விசாரித்து கொண்டிருந்தார்கள். நாங்கள் அதனை பார்த்து கொண்டிருந்தோம் அதற்கு அத்தாட்சியாக நானும் என் மாமா பழனியும் இரண்டு கையொப்பங்களை இட்டோம். அப்போது போலீசார் எதிரி விக்கியிடமிருந்து எங்கள் முன்னிலையில் இருசக்கர வாகனத்தை கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் பழனியும் கையொப்பம் செய்தோம். என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அது **அதசாஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அது **அதசாஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் இது சம்மந்தமாக என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். 18.01.2025 ம் தேதி என்ன கிழமை என்று என்னால் கூற முடியாது. கைபற்றிய வாகனம் பல்சர் பைக் மற்றபடி அதன் பதிவு எண் பற்றி எனக்கு தெரியாது. அதன் நிறம் எனக்கு

கவனம் இல்லை. நானும் என் மாமாவும் அவரது உறவினர் வீட்டுக்கு செல்ல என்னை துணைக்கு அழைத்தார். போலீசார் விக்கியை எந்த இடத்தில் விசாரித்தார்கள் என்று குறிபிட்டு கூற முடியாது என்று சொன்னால் பாலத்துக்கு அருகே விசாரித்தார்கள். அந்த பாலம் எவ்வளவு நீளம் என்றால் 30 அடி நீளம் இருக்கும். பாலம் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி உள்ளது. எங்கள் ஊரிலிருந்து அந்த பாலம் தெற்கு திசையில் இருந்தது. போலீசார் விசாரித்த போது காலை 11 மணியிலிருந்து 11.30 மணி இருக்கும். சுமார் 1 மணி நேரமாக விசாரித்தார்கள். 1 மணி நேரம் நாங்கள் அங்கு தான் இருந்தோமா என்றால் கிட்டதட்ட முக்கால் மணி நேரமாக அங்கு தான் இருந்தோம். தட்டச்சு செய்யப்பட்டிருந்த தாளில் தான் நான் கையொப்பம் இட்டேன். தனிதனியாக தான் நான் கையொப்பம் இட்டேன். முதலில் தட்டச்சு செய்யப்பட்டது எது 2வது தட்டச்சு செய்யப்பட்டது எது என்று என்னால் தற்போது கூற இயலாது. முதலாவதாக கையொப்பம் இட்ட தாளில் உள்ள விவரத்தை சுமார் 10லிருந்து 15 நிமிடங்கள் தட்டச்சு செய்தார்கள். 2வதாக கையொப்பம் இட்ட தாளில் உள்ள விவரங்களை சுமார் அரை மணி நேரம் தட்டச்சு செய்தார்கள். நான் கையொப்பம் இட்ட 2 தாள்களிலும் என்ன விவரங்கள் இருந்தது என்று என்னால கூற முடியாது என்று சொன்னால் அது குறித்து எனக்கு கவனமில்லை. சட்டவிதிகளை போலீசார் எதிரி விக்கியிடம் கூறினார்களா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. தட்டச்சு செய்த இடத்தில் 3, 4 போலீசார் இருந்தார்கள். அங்கு டிஎஸ்பி இருந்தாரா அல்லது காவல் ஆய்வாளர் இருந்தாரா என்றால் அது குறித்து எனக்கு கவனமில்லை. தட்டச்சு செய்தது காவல் ஆய்வாளரா அல்லது உதவி ஆய்வாளரா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியவில்லை. காவல் நிலையத்தில் தான் என்னிடமும் பழனியிடமும் வெற்று தாளில் தான் கையொப்பம் பெற்றார்கள் என்றும் கல்பாக்கத்துக்கு நானும் என்னுடைய மாமா பழனியும் செல்லவில்லை என்றும் அங்கு எதிரிகள் யாருமில்லை என்று சொன்னால் சரியல்ல. காவல் நிலையத்தில் தான் தட்டச்சு செய்யக்கூடிய வசதி இருந்தது என்றும் பாலத்து அருகே அந்த வசதி இல்லை என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறு விசாரணை :**</u> இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.01.20 18:46:47 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.